# திருச்சிராப்பள்ளி மாவட்டம்
## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு
## அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்
## அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விளம்பர அறிவிக்கை

ந.க.எண்.002 /2024 / அ1 நாள்– 02.01.2024

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்குட்பட்ட, அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய தலைப்பின்கீழ் காலியாக உள்ள 01 எண்ணிக்கையிலான அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நிரப்பம் செய்திடும் பொருட்டு, தகுதியான நபர்களிடமிருந்து 03.02.2024 அன்று பிற்பகல் 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | – | அலுவலக உதவியாளர் |
| 2. | பணி நியமன வகை | – | நேரடி நியமனம் |
| 3. | பணியின் தன்மை | – | அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படை பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவி செய்தல். |
| 4. | ஊதியம் | – | ஊதிய படி நிலை 1(1) –ன்படி தர ஊதியம் ரூ.15700 (ரூ.15700 – ரூ.50000 ) மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் |
| 5. | வயது | – | 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். |
| 6. | வகுப்பு | – | அதிகபட்ச வயதுவரம்பு (01.07.2023 அன்று உள்ளவாறு) |
| | i. பொது | | 32 வயதிற்குள். |
| | ii. பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | | 34 வயதிற்குள். |
| | iii. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | | 37 வயதிற்குள் |
| | iv. முன்னாள் இராணுவத்தினர் – (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) | | 55 வயதிற்குள் |
| 7. | மாற்றுத்திறனாளிகள் | – | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |
| 8. | மொத்த பணியிடங்கள் | – | 01 எண்ணிக்கை. |

| | | | |
|---|---|---|---|
| 9. | இட ஒதுக்கீடு விவரங்கள் | | |

| வ.எண் | இனசுழற்சி எண் | இனசுழற்சி | முன்னுரிமை பெற்றவர் / முன்னுரிமை அற்றவர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 3 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் | 1 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கல்வித்தகுதி | – | 8–ஆம் வகுப்பு (எட்டாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ( தமிழ்நாடு அடிப்படை பணிக்கான சிறப்பு விதிகள் பிரிவு 19 விதி 5 (2) (a) ) |
| 11. | சிறப்பு தகுதிகள் | – | மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். |
| 12. | விண்ணப்பப் படிவம் | – | இப்பணியிடத்திற்கான விண்ணப்பப் படிவத்தினை **www.tiruchirappalli.nic.in** என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் **(National Career Service Portal) www.ncs.gov.in** ஆகியவற்றில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 13. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | – | **03.02.2024–** பிற்பகல் 5.45 மணி வரை. |

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை **www.tiruchirappalli.nic.in** என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் **(National Career Service Portal) www.ncs.gov.in** ஆகியவற்றில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
3. விண்ணப்பதாரர் கல்வி தகுதி குறித்த சான்று , இருப்பிட சான்று, சாதி சான்று மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவை சுய சான்றொப்பமிடப்பட்டு கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட சான்றுகள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
4. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பின்வரும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 03.02.2024 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும்.

**ஆணையர்,**
**அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,**
**திருச்சிராப்பள்ளி - 639101**

5. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

7. எந்த ஒரு விண்ணப்பத்தினையும் நிராகரிக்கும் அதிகாரம் நியமன அலுவலருக்கு உண்டு.

8. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் நேர்காணல் கடிதம் (Call Letter) மூலம் தனியே அனுப்பி வைக்கப்படும்.

9. முன்னுரிமை பெற்றவர் பணியிடங்களுக்கு அரசாணை நிலை எண்.122, மனித வள மேலாண்மைத் (கே.2) துறை, நாள்– 02.11.2021–ன் படி, முன்னுரிமை அடிப்படையில் தகுதியான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

10. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303, நிதி(ஊதியக்குழு) துறை நாள்.11.10.2017, அரசாணை எண்.305 நிதி(ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017 மற்றும் அரசாணை எண்.306, நிதி (ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017–ன்படி ஊதியம் (ரூ.15700 – ரூ.50000 ) மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

V.8W 2.1.24

ஆணையர்,
அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சிராப்பள்ளி.

2/1/24

e:\bkp\2024\a1\office assitant\office assistant vacant.docx

# திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு
# அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்
# அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்பப்படிவம்
# (நேரடி நியமனம்)

கடவுச்சீட்டு
அளவிலான
புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | ஆண் / பெண் /இதரர் | |
| 3. | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | |
| 4. | பிறந்த தேதி / வயது | நாள் | மாதம் | வருடம்<br>--------வயது |
| 5. | கல்வித்தகுதி | |
| 6. | முழு அஞ்சல் முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | |
| 7. | சொந்த மாவட்டம் | |
| 8. | தொலைபேசி மற்றும் கைப்பேசி எண் | |

| | | |
|---|---|---|
| 9. | மதம் | இந்து / கிறிஸ்தவர் / முஸ்லிம் / இதர மதத்தினர்<br>(விவரம் குறிப்பிடப்பட வேண்டும்) |
| 10. | வகுப்பு | பொது / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் |
| 11. | ஆதரவற்ற விதவை | ஆம் / இல்லை |
| | கண்பார்வையற்றோர் | ஆம் / இல்லை |
| | உடல் ஊனமுற்றோர் | ஆம் / இல்லை |
| | முன்னாள் இராணுவத்தினர் | ஆம் / இல்லை |
| 12. | முன்னுரிமை பெற்றவரா ? | ஆம் / இல்லை |
| | அ) ஆம் எனில் அதன் விவரம் (1.கொரோனா தொற்றினாலோ இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்(மகன் / மகள்) 2.முதல் தலைமுறை பட்டதாரிகள் உள்ளிட்ட அரசாணை நிலை எண்.122, மனித வள மேலாண்மைத் (கே) துறை, நாள்–02.11.2021–ன் இணைப்பில் கண்டுள்ள 20 இனங்களில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னுரிமை நடைமுறைகள் பின்பற்றப்படும்) | |

- விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்.
- தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது தேர்வுக்குழு எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுகிறேன்.
- என் மீது காவல் துறை குற்றவியல் வழக்குகள் ஏதும் பதியப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

**இடம்:**

**நாள்:**

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

**குறிப்பு – கல்வி தகுதி, இருப்பிடம், சாதிச் சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றின் சுய சான்றொப்பமிடப்பட்ட நகல்கள் விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் நேர்காணலின் போது கட்டாயம் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.**